**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.5/2025**
Prosecution: **PW2**

Deposition of the witness of **LW2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.அஜித்குமார் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.கோவிந்தராஜ் | Occupation | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village /Area | விளாபாக்கம் | Age | 27 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 6736 4303 6213 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **27.11.2025.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள விளாபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள். அ.சா.1 சுதாகர் என்பவரையும் எனக்கு தெரியும். 24.10.2022–ம் தேதி தீபாவளி அன்று இரவு 11.00 மணிக்கு நான், சுதாகர், ஜெய்கணேஷ், ராகுல், ஜெகதீஷ் எங்கள் ஊரிலுள்ள பெருமாள் கோவில் எதிரில் பேசிக்கொண்டிருந்தோம். எதிரிகள் 4 பேரும் எங்களிடம் வந்து புரட்டாசி மாதம் சனிக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி கணக்கை ஏன்டா காண்பிக்கவில்லை என்று எங்களிடம் கேட்டார்கள். நாங்கள் அனைவரும் எதிரிகள் தீபாவளிக்கு மது அருந்திவிட்டு இருப்பார்கள் என்று அங்கிருந்து நாங்கள் அவரவர் வீட்டிற்கு செல்வதற்காக அங்கிருந்து சென்று கொண்டிருந்த போது 1–ம் எதிரி யுவராஜ் எங்களை பார்த்து ஏன்டா பொட்ட பசங்க மாதிரி எங்களை பார்த்ததும் எழுந்து போகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ஜெய்கணேஷ் என்பவர் 1–ம் எதிரியை பார்த்து ஏன்டா இப்படி பேசுகிறாய் என்று கேட்டார். நாங்கள் ஆறுமுக ஆச்சாரி வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருக்கும் போதே 2–ம் எதிரி கோகுல் அவரது கையால் சுதாகரின் முதுகில் அடித்தார். அதே சமயத்தில் 1–ம் எதிரி யுவராஜ் அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்து என்னுடைய இடதுபக்க வயிற்றில் குத்தினார். பின்பு என்னுடைய இடதுபக்க மார்பு, கழுத்து, முதுகு, இடதுகை முட்டி ஆகிய இடத்தில்

கத்தியால் குத்தி ரத்தக்காயங்களை ஏற்படுத்தினார். அதை பார்த்து தடுக்க வந்த சுதாகரை 1–ம் எதிரி அதே கத்தியால் சுதாகரின் இடது கால் தொடையிலும், கணுக்கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்படுத்தினார். சத்தத்தை கேட்டு அங்கிருந்த அண்ணாமலை என்பவர் ஓடிவந்து தடுத்த போது 1–ம் எதிரி அதே கத்தியால் அவருடைய நடுவிரல் மற்றும் மோதிரவிரலில் ரத்தக்காயம் ஏற்படுத்தினார். 3–ம் எதிரி தானேஷ் எங்களை பார்த்து இங்கே உட்கார்ந்திங்கனா எல்லாரையும் குளோஸ் பண்ணிடுவோம் என்று மிரட்டினார். 4–ம் எதிரி தீனா எங்களை பார்த்து நீங்கள் என்ன பெரிய தாதாவா என்று அசிங்கமாக திட்டினார். எனக்கு ரத்தப்போக்கு அதிகமாக ஏற்பட்டதால் முதலில் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று உள்நோயாளியாக அங்கு 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். சுதாகர் என்பவர் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றார். அண்ணாமலை ஆற்காடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றார். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 கத்தி தான் 1–ம் எதிரி யுவராஜ் சம்பவத்தில் பயன்படுத்திய கத்தியாகும். என்னிடம் காண்பிக்கப்படும் ரத்தக்கறை படிந்த கட்டம் போட்ட ஒரு முழுக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த கட்டம் போட்ட லுங்கி ஆகியவை தான் சம்பவ சமயத்தில் நான் அணிந்திருந்த ஆடைகள் ஆகும். ரத்தக்கறை படிந்த கட்டம் போட்ட ஒரு முழுக்கை சட்டை **சா.பொ.2** ஆகும். ரத்தக்கறை படிந்த கட்டம் போட்ட லுங்கி **சா.பொ.3** ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை நிறுத்தி வைத்து வழக்கை ஒத்திவைக்க கு.வி.மு.ச பிரிவு 231(2)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN
Date: 2025.11.27 16:54:55 -0500

I Additional District & Sessions Judge,
Ranipet.